பள்ளியாக இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் நேரடியாக கோரிக்கை வைத்தவுடனே மாணவர் மாணவிகளின் அவசியம் கருதி, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆசியோடு உடனே மேல்நிலைப் பள்ளியாக உருவாக்கினார். இப்பள்ளிக்கு மாணவர் விடுதி வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்தவுடனே மாணவர் விடுதி ஒன்று துவக்கினார்கள். அத்துடன் மாணவர் விடுதிக்கு ரூபாய் 25 லட்சம் பணம் ஒதுக்கி தற்போது கட்டிடம் கட்டப்பட்டு உள்ளது. இப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாக இருக்கும்போதே அவசியம் கருதி கூடுதல் கட்டிடம் வேண்டுமென கோரிக்கை வைத்தேன். தற்போது ஒரு கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இதுவரையில் எந்த அரசும் செய்ய முன்வராத கோரிக்கைகளை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தான் மக்கள் கோரிக்கைகளை தங்களின் சாதனைகளாக ஆக்கி செய்து முடித்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே எனது தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது ஆட்சியில் அரசு பொதுத் தேர்வில் 100 சதவிகித வெற்றியை பெற்றுத் தந்துள்ள அப்பள்ளி தற்போது மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளதால் அப்பள்ளிக்கு மீண்டும் ஒரு கூடுதல் கட்டிடம் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிக்குத் தேவையான கட்டிடங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் நிறைய கொடுத்திருக்கிறோம். மேலும் கேட்கின்ற இந்தச் சூழ்நிலையில், இதுபோன்று பல பள்ளிகள்-தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 1225 பள்ளிகள்-இருக்கின்றன. அதையும் கருத்தில் கொண்டு நிதிநிலையையும் கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 359, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

359—

குறிஞ்சிப்பாடி தொகுதியில் மீனவர்கள் குடியிருப்பு கட்டுதல்

***33151—**திரு. கு. சிவசுப்பிரமணியன் :

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1995 ஏப்ரல் 19]

குறிஞ்சிப்பாடி தொகுதியில் உள்ள நஞ்சலிங்கம்பேட்டை, நாச்சியார் பேட்டை, பேட்டோடை, மானியார்பேட்டை ஆகிய கிராமங்களில் மீனவர்கள் குடியிருப்புகள் கட்டித்தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குறிஞ்சிப்பாடி தொகுதியில் உள்ள நஞ்சலிங்கம் பேட்டையில் 47 வீடுகளும், பேட்டோடையில் 50 வீடுகளும் 1994-95 ஆம் ஆண்டில் கட்டித் தரப்படவுள்ளன. மீதமுள்ள கிராமங்களில் அரசு வீடுகள் கட்டித்தர தகுதியுள்ள கடல் மீனவர்கள், தலா 3 செண்ட் நிலம் வீதம் அரசுக்கு ஒப்படைத்தால், அடுத்துவரும் ஆண்டில் அவர்களுக்கும் வீடு கட்டித் தர பரிசீலனை செய்யப்படும்.

முற்பகல் 11.20

திரு. கு. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கான மயிலாட கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்து தானும் தன் பொல்லாச் சிறகுதனை விரித்து ஆடியது போல, இன்று தமிழகத்திலே நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பார்த்து யார் யாரோ வாய்நீளம் காட்டி பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினுடைய ஒட்டுமொத்த ஆதரவைப் பெற்ற புரட்சித் தலைவி அவர்கள் இந்த 3¾ ஆண்டுக் காலத்தில் பல்வேறு நலத் திட்டங்களை செயலாக்கி, இன்று சாதனை படைத்திருக்கிறார்கள். மரம்வெட்டி தலைவன் எல்லாம் நான்தான் இந்தச் சமுதாயத்தினுடைய வழிக்காட்டி என்று சொல்லி வந்த நேரத்தில் இன்று சரித்திரத்திலே இடம் பெற்றுவிட்ட நம்முடைய சரித்திரநாயகி புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் அமைப்புச் சட்டத்திலே 20 சதவிகிதத்தைப் பெற்றுத் தந்து, அந்தச் சமுதாய மக்களை வாழ வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சமூக நீதி காத்த எங்களுடைய தாயே, தமிழே, நீங்கள் வாழ வேண்டும். நீங்கள் வாழ்வதனால் இந்தத் தமிழகம் வாழும் என்று சொல்லி, எங்களுடைய குறிஞ்சிப்பாடி தொகுதியில் இன்றைக்கு 600 வீடுகளை மீனவச் சமுதாய மக்களுக்காக இந்தக் குறுகிய காலத்திலே, பொற்கால ஆட்சியில், புரட்சித் தலைவியினுடைய ஆட்சி கட்டி தந்திருக்கிறது. அவர்களுக்கு நான் நன்றி சொல்லி, இந்தத் துறையினுடைய அமைச்சராக விளங்குகின்றவர் நல்ல செயல்பாடு மிக்க இளைஞராக இருந்து, எங்களுடைய மீனவச் சமுதாயத்திற்கு நல்ல பல காரியங்களைச் செய்து வருகிறார்கள். இந்த நிதியாண்டிலும் அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு அவர்கள் சமுதாய நலக் கூடங்களைக்கட்டியும் மற்றும் இதர காரியங்களையும் செய்து தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1995 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆற்றல்மிக்க தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் மீனவர்களே அவர்களுக்குத் தேவையான வீடுகளைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்கின்ற ஒரு புதிய உத்தரவை வழங்கி, ஒவ்வொரு ஆண்டும் 5½கோடி ரூபாய் செலவில் 2 ஆயிரம் வீடுகளை கட்டித் தருவதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே இந்த 4 ஆண்டுக் காலத்தில் ஏறக்குறைய 24 கோடி ரூபாய்க்கு 9 ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகளை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நம்முடைய மீனவ மக்களுக்காக கட்டித் தந்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே இந்த ஆண்டும் கூட 5½ கோடி ரூபாய் செலவில் நம்முடைய ஆற்றல்மிக்க புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்குக் கட்டித் தருவதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். மேலும் மீனவ கிராமங்களில் அணுகு சாலைகள் (approach roads) மற்றும் இணைப்புச் சாலைகள் (link roads) போன்ற அனைத்து வசதிகளையும் ஏற்படுத்துவதற்காக உள்ளாட்சித் துறையுடன் கலந்து ஏற்பாடு செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 360, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

360—

கன்னியாகுமரியில் காட்சி மையம் அமைத்தல்

***25695—**திரு. *மா. சுந்தரதாஸ்:*

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலா பயணிகள் சூரிய உதயம், சூரியன் மறையும் காட்சிகளைக் காண்பதற்கு காட்சி மையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரியில் காட்சி மையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் எந்த அளவிலே உள்ளது ? எப்பொழுது அமுலுக்கு வரும்? அதற்குரிய பணம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நமது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்